Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான இலவச
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 சென்னை | தினசரி | 4 பக்கம் வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 13, 2021 4 பக்கங்கள் ரூ.2/- இதழ் 30

## காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு பஸ்கள் மீண்டும் இயக்கம்

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ராஜகண்ணப்பன் தொடங்கி வைத்தனர்

# பஸ் கட்டணம் உயராது!

சென்னை, ஆக 13 2021: சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தில் இருந்து காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட பகுதிகளுக்கு பஸ்கள் இயக்கப்பட்டன.

கடந்த ஆட்சியில் ஒருசில வழித்தடங்களில் இயக்கப்பட்ட சென்னை புறநகர் பஸ்கள் திடீரென நிறுத்தப்பட்டன. பயணிகள் கூட்டம் இல்லாததால், நஷ்டம் ஏற்பட்டதால் பஸ்கள் நிறுத்தப்பட்டதாக கூறப்பட்டது.

இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். புறநகர் பகுதிகளில் இருந்து சென்னை நகருக்கு வரக்கூடிய மக்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் சிரமப்பட்டனர்.

இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் நிறுத்தப்பட்ட பஸ்களை மீண்டும் இயக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்தது. காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு பஸ்களை மீண்டும் இயக்க வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

அதே நேரத்தில் சென்னை புறநகர் பகுதிகளை இணைக்க கூடுதலாக புதிய வழித்தடங்களிலும் பஸ்களை இயக்க வேண்டும் என்று அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ராஜகண்ணப்பன், சேகர்பாபு ஆகியோரிடம் பொதுமக்கள் வலியுறுத்தினார்கள்.

அதன் அடிப்படையில் புதிய வழித்தடங்களில் மட்டுமின்றி ஏற்கனவே நிறுத்தப்பட்ட பஸ்களையும் இயக்க போக்குவரத்துத்துறை



அமைச்சர் ராஜகண்ணப்பன் நடவடிக்கை எடுத்தார்.

அதன்படி சென்னையில் நேற்று 30 பஸ் போக்குவரத்து புதியதாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை தொகுதியில் இருந்து 23 பஸ் சேவையும், வடசென்னையில் இருந்து 7 பஸ் சேவையும் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

சைதாப்பேட்டையில் நடந்த விழாவில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், ராஜகண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டு புதிய பஸ் போக்குவரத்தை தொடங்கி வைத்தனர். அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜகண்ணப்பன் நிருபர்களிடம் கூறியதாவது:-

தமிழகத்தில் 40 சதவீதம் பெண்கள் பஸ்களை பயன்படுத்துகின்றனர் என்ற அடிப்படையில் இலவச பேருந்து பயணம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது 61 சதவீதம் பெண்கள் இலவச பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

இதுவரை 9.20 கோடி பெண்கள் இலவச பயணம் மூலம் பயனடைந்து உள்ளனர். நாள் ஒன்றுக்கு 30 லட்சம் பெண்கள் பயணம் செய்கிறார்கள். இதனால் கூடுதலாக 150 கோடி நிதி ஒதுக்க வேண்டியுள்ளது.

தமிழகத்தில் போக்குவரத்துத்துறை நஷ்டத்தில் சென்றாலும், பஸ் கட்டண உயர்வு என்பது தற்போதைக்கு இல்லை. பேருந்து நிலையங்களில் விற்கப்பட்ட அம்மா குடிநீர் மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நிதி சுமை பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. மக்களின் சேவைக்காக செயல்படுவோம். போக்குவரத்துத்துறை புதிய பொலிவுடன் இனி செயல்படும்.

வண்டலூர் அருகே கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலையம் இந்த ஆட்சி காலத்தில் கட்டி முடிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் சென்னை மாநகர போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் அன்பு ஆபிரகாம் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## காஞ்சிபுரத்தில் சிறுபான்மையினர் மக்களின் மேம்பாட்டிற்காக கருத்துக்கேட்பு-ஆய்வு கூட்டம்: மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது

காஞ்சிபுரம், ஆகஸ்ட் 13 2021: காஞ்சிபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மக்கள் நல்லுறவு மையக் கூட்டரங்கில் மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் தலைமையில் சிறுபான்மையினர் மக்களின் மேம்பாட்டிற்காக, அவர்களின் கருத்துக்கேட்பு மற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

பிறகு நில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் நிருபர்களிடம் கூறியதாவது:

சிறுபான்மையினர் மக்களின் வாழ்வியல் பிரச்சனைகள் மற்றும் கோரிக்கைகளை அரசாங்கத்திற்கு தெரிவிப்பதற்கும், அரசாங்கத்தால் செயல்படுத்திவரும் திட்டங்கள் மக்களிடம் சென்று அடைகின்றதா என்பதை பார்ப்பது இந்த ஆணையத்தின் செயல்பாடாகும். அவ்வகையில் தமிழகத்தில் உள்ள மதச்சார்பற்ற சிறுபான்மையினர் மற்றும் மொழிச்சார்பற்ற சிறுபான்மையினர் என 40 விழுக்காடு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் எந்தவொரு காலத்திலும், எந்தவொரு நேரத்திலும் சிறுபான்மையினர் மக்களின் உரிமைகளுக்கு பாதிப்பு உண்டாக்கக்கூடிய எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்த அனுமதிக்கமாட்டார். அந்த வகையில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு இந்த ஆணையத்தின் மூலமாக நாம் அனைவரும் நன்றி சொல்ல கடமைபட்டுள்ளோம். ஜனநாயகத்தின் தரம் என்பது, ஒரு நாட்டில் உள்ள சிறுபான்மையினர் தங்களது வாழ்க்கையை சிறப்பாக, பாதுகாப்பாக, மகிழ்ச்சியாக மற்றும் சந்தோஷமாக வாழ்வதேயாகும். பெரும்பான்மையாக உள்ள



தமிழ்நாடு முதலமைச்சரின் ஆட்சியில் அறநிலையத்துறையில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை கண்டு அனைத்து மதத்தினரும் பாராட்டி வருகின்றார்கள். ஆகவே, நாம் எந்த மதம் என்பதைவிட அனைவரும் தமிழன் என்று அடையாளம் காண்போம், தமிழர்களாக ஒற்றுமையுடன் இருப்போம், தமிழர்களாய் எழுந்து நிற்போம் என மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ் கேட்டுக்கொண்டார். மாவட்டத்தில் உள்ள சிறுபான்மை

இந்நிகழ்ச்சியில், ஆணையத்தின் உறுப்பினர் செயலர் துரை.ரவிச்சந்திரன், மாவட்ட கலெக்டர் டாக்டர் மா.ஆர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் (உத்திரமேரூர்) க.சுந்தர், (காஞ்சிபுரம்)சி.வி.எம்.பி.எழிலரசன், (ஸ்ரீபெரும்புதூர்) கு.செல்வபெருந்தகை, மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பன்னீர்செல்வம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பி.ஸ்ரீதேவி, அரசு அலுவலர்கள் மற்றும் சிறுபான்மையின மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட ஒரே இயக்கம் திமுக : அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் பேச்சு

திண்டிவனம், ஆக.13 2021: திண்டிவனம் தனியார் திருமண மண்டபத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டம், ஒலக்கூர் கிழக்கு, மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு ஒலக்கூர் மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் ஆறுமுகம், கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் புருஷோத்தமன் ஆகியோர் தலைமை தாங்கினர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.ஆர்.மாசிலாமணி, சீதாபதி சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தமிழக சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும்,

விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளருமான செஞ்சி கே. எஸ். மஸ்தான் பேசும்போது, மத்தியில் பாரத பிரதமராக இருந்து வருபவர் மாண்புமிகு மோடி. அவர்கள் இடத்தில் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். வெயில், குளிர், பனி, மழை என்று பாராமல் டெல்லியில் போராடிக்



கொண்டிருக்கிறார்கள். விவசாயிகள் பாதிப்பான அந்த சட்டத்தை திரும்ப பெற வேண்டும் என்று போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு நிலையை பார்க்கிறோம். ஆனால் தமிழகத்தில் இன்றைக்கு உணவு அளிக்கின்ற விவசாயி. இந்த நாட்டினுடைய முதுகெலும்பு. எனவே விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட ஒரே இயக்கம் திராவிட இயக்கம் தான் என்பதை நினைவூட்டும். இன்றைக்கு. இல்லை. பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்தே விவசாயிகளுக்காக, ஏன் முத்தமிழறிஞர் கலைஞர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும்போது தனது கன்னிப் பேச்சில் விவசாயிகள் பற்றி தான் சட்டமன்றத்தில் பேசினார். அவரது போராட்டம் விவசாயிகளை நோக்கித்தான் முதல் போராட்டம். எனவே விவசாயிகளுக்கு அரணாக, பெண்களுக்கு பாதுகாப்பு சட்டங்களை இயற்றி நலத்திட்டங்களை வழங்கி கொண்டிருக்கும் ஆட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. அண்ணா கண்ட ஆட்சி, தமிழக கலைஞர் கண்காட்சி, இன்றைக்கு தளபதி மூலமாக அதனை பெற்றிருக்கிறோம் . இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஆர் மாசிலாமணி சீத்தாபதி சொக்கலிங்கம் செந்தமிழ்ச்செல்வன் மாநில மருத்துவர் அணி டாக்டர் சேகர், பொதுக்குழு உறுப்பினர் ரமணன், அமராபதி, துணைச் செயலாளர் வசந்தா, மாவட்ட வழக்கறிஞர் அணி கே.சி. ஆதித்தன், அருணகிரி, மாவட்ட இலக்கிய அணி சீனி ராஜ், மாவட்ட மாணவரணி எம்.டி. பாபு, கார்த்தி, ராபின்சன், வீ.சி. அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை ஒலக்கூர் ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராம் ஆகியோர் செய்திருந்தனர்.

## கல்பாக்கம் புதுப்பட்டினத்தில் மதுரை கோவிந்தம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் நீட் தேர்வு மையத்தை மாவட்ட அதிமுக செயலாளர் எஸ்.ஆறுமுகம் திறந்தார்

காஞ்சிபுரம், ஆகஸ்ட் 13 2021: மதுரை கோவிந்தம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் கல்பாக்கம் புதுப்பட்டினம் கிழக்குக் கடற்கரைச் சாலை (ஈசிஆர் ரேஷன் கடை அருகில்) நீட் தேர்வு மற்றும் வேலைவாய்ப்பு இலவச பயிற்சி மையம் தொடங்கப்பட்டது.

இந்த மையத்தை செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளர் திருக்கழுக்குன்றம் எஸ்.ஆறுமுகம் திறந்து வைத்தார்.

இதுகுறித்து இந்த பயிற்சி மையத்தின் நிறுவனர் டி.காயத்ரி தனபால், மாவட்டக் கழக அவைத் தலைவரும், முன்னாள் எம்எல்ஏவுமான ம.தனபால் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது: பிளஸ் டூ முடித்து நீட் தேர்வு எழுத விருப்பமுள்ளவர்கள் கல்பாக்கம், புதுப்பட்டினம், கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள எங்களது மதுரை கோவிந்தம்மாள் கல்வி அறக்கட்டளை சார்பில் இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இலவச மையத்தில் பிளஸ் டூ முடித்த மாணவ,மாணவிகள் சேர்ந்து பயன்பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியின் கல்பாக்கம் அணுமின் நிலையம் இயக்குனர் வெங்கட்ராமன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளரும், முன்னாள் பேரூராட்சி



தலைவருமான வீ. வேலாயுதம், அதிமுக நிர்வாகி கலியபெருமாள், நீட் தேர்வு மையத்தின் மேனேஜர் சம்பத் மற்றும் கல்வியாளர்கள் நகரப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக அறக்கட்டளை நிறுவனர் டி.காயத்ரி தனபால், மாவட்டக் கழக அவைத் தலைவரும், முன்னாள் எம்எல்ஏவுமான ம.தனபால் ஆகியோர் வரவேற்றனர்.

## கோவை மாவட்ட கலெக்டர், கேரள முதல்-மந்திரி ஆகியோருக்கு, வெடிகுண்டு மிரட்டல் விடுத்த முன்னாள் விமானப்படை அதிகாரி கைது

கோவை, ஆகஸ்ட் 13 2021: கோவை கேரள முதல் மந்திரி மற்றும் கோவை கலெக்டருக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த முன்னாள் விமானப்படை அதிகாரியை போலீசார் கைது செய்தனர். கோவை கலெக்டர் சமீரன் மற்றும் கேரள முதல்வர் செல்போனில் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து போலீஸ் கமிஷனர் நஜ்மல் ஹோட வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபரை பிடிக்க சைபர்கிரைம் போலீசாருக்கு உத்தரவிட்டார். இதையடுத்து சைபர் கிரைம் போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கோவை கலெக்டர் கேரள முதல்-மந்திரி ஆகியோரின் செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு எனக்கு கடன் பிரச்சினை உள்ளது. இதை தீர்க்க ஒருவரை மீடியேட்டர் ஆக நியமிக்க வேண்டும். இல்லை என்றால் கேரளா ரயில் நிலையம் உள்ளிட்ட சில இடங்களில் குண்டு வெடிக்கும் என்று பேசி விட்டு இணைப்பைத் துண்டித்துள்ளார். அந்த செல்போன் எண் மற்றும் சேலத்தில் வெடிகுண்டு மிரட்டல் விடுத்த செல் எண் ஒன்று என்று போலீசாருக்கு தெரியவந்தது. இதைஎடுத்து போலீஸார் விசாரணை நடத்தியபோது சேலத்தில் இருந்து வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதைஅடுத்து போலீசார் நடத்திய விசாரணையில் அந்த செல்போன் எண் மாமாங்கத்தில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் பகுதியில் இருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். இதை தொடர்ந்து போலீசார் அங்கு சென்று அந்த செல்போன் எண்ணை வைத்து அந்த நபரை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்த பிரேம்ராஜ் நாயர் 46. என்பதும் அவர் தான் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர். இது குறித்து போலீஸார் கூறும்போது:- வெடிகுண்டு மிரட்டல் விடுத்த பிரேம் ராஜ் நாயர் நேற்று முன்தினம் சேலம் ஜங்ஷன்



முல்லை நகர் பகுதியில் உள்ள ஒரு கடையில் செல்போனுக்கு ரீசார்ஜ் செய்துள்ளார். இதையடுத்து செல்போன் கோபுரம் மூலம் கண்காணித்து அவர் மாமாங்கம் பகுதியில் உள்ள ஒரு நட்சத்திர ஓட்டலில் தங்கி இருப்பது தெரியவந்ததை அடுத்து நாங்கள் அவரை கைது செய்துள்ளோம் என கூறினார். தொடர்ந்து அவரிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் தெரிகிறது.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

வெள்ளிக்கிழமை,
ஆகஸ்ட் 13, 2021

# காஞ்சிபுரம் அருகே வீட்டில் தங்க நகை, வெள்ளிப் பொருட்கள்திருடிய சென்னை வாலிபர் உள்பட 2 பேர் கைது

*காஞ்சிபுரம், ஆகஸ்ட் 13 2021:* காஞ்சிபுரம் அருகே பெரியார் நகர் பகுதியில் வசிப்பவர் கங்கா தரப்பா. இவர் குடும்பத்துடன் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியூர் சென்றிருந்த நிலையில், மர்ம நபர்கள் இவரது வீட்டின் பூட்டை உடைத்து, உள்ளே சென்று பீரோவில் இருந்த 4.50 சவரன் தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்களை திருடி சென்றுள்ளனர்.

இதுகுறித்து கங்காதரப்பா காஞ்சிபுரம் தாலுகா போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இதற்கிடையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு டாக்டர் எம்.சுதாகர் உத்தரவின் பேரில் காஞ்சிபுரம் அருகே ராஜகுளம் பகுதியில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தார். அப்போது ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த 2 வாலிபர்கள் போலீசாரை பார்த்ததும் மிரள மிரள விழித்தனர். இதில் சந்தேகம் அடைந்த போலீசார் அவர்களை காஞ்சிபுரம் தாலுகா போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று துருவி துருவி விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில், திருவண்ணாமலை மாவட்டம் திடீர்குப்பத்தைச் சேர்ந்த உதயகுமார் (எ) உதயா (26), சென்னை தேனாம்பேட்டையை சேர்ந்த விக்னேஸ்வரன் (21) என்பதும், சென்னை ராயப்பேட்டையில் இருந்து மோட்டார் சைக்கிளை திருடி வந்ததும், பெரியார் நகர் பகுதியில் கங்காதரப்பா என்பவரின் வீட்டில் திருடியதை ஒப்புக் கொண்டனர்.

இதையொட்டி அந்த 2 வாலிபர்களை கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து 4.50 சவரன் தங்க நகைகள் மற்றும் வெள்ளி பொருட்கள், திருடிய மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர.

# காட்டுப்பகுதியில் வடமாநில தொழிலாளி பிணம் கொலையா? போலீசார் விசாரணை



*கோவை, ஆகஸ்ட் 13 2021:* கோவை மதுக்கரை போடி பாளையத்திலிருந்து ஒத்தக்கால் மண்டபம் செல்லும் வழியில் தனியார் கம்பெனி அருகே காட்டுக்குள் வடமாநில வாலிபர் பிணம் காயங்களுடன் கிடந்தது. போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து உடலை கைப்பற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

பீகார் மாநிலம் சேர்ந்தவர் ஆஷீகுமார் (21). அவர் கோவை மதுக்கரை அடுத்த சீராபாளையம் பகுதியில் உள்ள தனியார் செருப்பு கம்பெனியில் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் கொரானா நோய் பரவல் காரணமாக கம்பெனியில் வேலை செய்த வெளிமாநிலத்தவர்கள் அவரவர் சொந்த ஊர்களுக்கு சென்றனர். அப்போது ஆஷீகுமார் அவரது சொந்த ஊருக்கு சென்று விட்டார்.

பின்னர் மீண்டும் கடந்த 19-ந் தேதி பீகாரில் இருந்து புறப்பட்டு கோவை திரும்பினார். வழக்கம் போல கம்பெனிக்கு வேலைக்கு சென்று வந்தார். கடந்த 3 நாட்களாக இவர் கம்பெனிக்கு வேலைக்கு செல்லாமல் இருந்ததாக தெரிகிறது.

இந்நிலையில் அங்குள்ள தனியார் கல்லூரி பின்புறம் உள்ள காட்டு பகுதியில் சென்றவர்கள் ஒருவர் இறந்து கிடப்பதாக மதுக்கரை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். விசாரணையில் இறந்து கிடந்தது செருப்பு கம்பெனியில் வேலை செய்து வந்த ஆஷுகுமார் என்பது தெரியவந்தது.

மேலும் ஆஷீகுமார் இறந்து கிடந்த இடத்தில் இடுப்பு பெல்ட் ஒன்று கிடந்தது. இதையடுத்து போலீசார் அவரது உடலை மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து மதுக்கரை போலீசார் வழக்குப்பதிவு செய்து ஆஷீகுமார் கொலை செய்யப்பட்டாரா என விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஓட்டல்களை போல பேக்கரிகளுக்கும் இரவு 9 மணி வரை திறந்திருக்க அனுமதி கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக கோவை மாவட்ட கலெக்டரிடம் மனு



*கோவை, ஆகஸ்ட் 13 2021:* கோவை மாவட்ட கலெக்டர் சமீரனிடம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட குழு சார்பாக ஒரு மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:- கொரோனா பெரும் தொற்று காரணமாக மூன்றாவது அலையை தடுக்கும் விதத்தில் தமிழக அரசு ஊரடங்கு தளர்வுகளுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஓட்டல்களுக்கு மட்டும் இரவு 9 மணி வரை பார்சல் வழங்கலாம் என கூறப்பட்டுள்ளது. இதேபோல கோவையில் பேக்கரி உணவகங்கள் நடத்தக்கூடிய கடைகள் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகாரர்கள் நம்பி வாழ்ந்து வருகின்றன. 5 மணிக்கு பேக்கரிகள் மூடுவதால் அவர்களுடைய வாழ்வாதாரம் மிகவும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. ஆதலால் உணவகங்களுக்கு போலவே பேக்கரியும் இரவு 9 மணி வரை திறந்திருக்க அனுமதி அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதாக அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# தொழிலாளர்களின் அனைத்து கோரிக்கைகளையும் உடனே நிறைவேற்றும் சூப்பர் ரப்பர் தொழிற்சாலை

*மதுரை, ஆகஸ்ட் 13 2021:* மதுரை மேலூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட கல்லம்பட்டி கிராமத்தில் சூப்பர் ரப்பர் மிக்ஸ் தொழிற்சாலை இயக்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் 300க்கும் மேற்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக ஆண், பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

தொழிற்சாலையின் நிறுவனருமான கேரளாவை சேர்ந்த ஜோஸ் மேத்யூ தொழிலாளர்களின் நலனில் அக்கறை எடுத்து தொழிலாளர்களுக்காக மருத்துவ காப்பீடு, தொழிலாளர் வைப்புநிதி என்று அனைத்து விதமான சலுகைகளை வழங்கி தொழிலாளர்களை ஊக்கப்படுத்தி வருகிறார்.

அரசின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்குட்பட்டு வேலை நேரம், பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவைகளை பொதுமேலாளர், உற்பத்தி மேலாளர் ராமச்சந்திரன், விஜயகுமார் சிறப்பாக ஏற்பாடு செய்து மற்ற தொழிற்சாலைகளுக்கு முன் உதாரணமாக செயல்பட்டு வருகின்றனர்.

மேலும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரப்பர் மூலப்பொருள் முன்னணி நிறுவனமான டிவிஎஸ் டயர் தொழிற்சாலைக்கு வாகன டயர் தயாரிக்க அனுப்பபட்டு வருகிறது.

இந்நிலையில் ஒருசிலர் தொழிற்சங்கங்களின் தவறான நடவடிக்கையால் தொழிலாளர்களுக்கு மருத்துவ காப்பீடு உள்ளிட்ட சலுகைகள் வழங்க வேண்டும் என்று தொழிலாளர்களை தூண்டி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து தொழிற்சாலை மேலாளர்கள் ராமச்சந்திரன் விஜயகுமார் கூறுகையில், இத்தொழிற்சாலையில்300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் மேலும் மருத்துவ சேவை காப்பீடு திட்டம் சட்ட திட்டங்களுக்குட்பட்டு




தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு இருப்பதால் தொழிலாளர்களுக்கு மருத்துவ சேவை வழங்க அனைத்து விதமான ஏற்பாடுகளையும் தொழிற்சாலை நிர்வாகம் செய்து கொண்டு வருகிறது, மேலும் தொழிற்சாலைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் தவறான எண்ணத்தில் செயல்பட்டு வரும் ஒரு சில நபர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இத்தொழிற்சாலை தொழிலாளர் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பாதுகாப்பு நடைமுறைகளின் படி இயங்கி வருகிறது என்று தெரிவித்தார்.



*மதுரை, ஆகஸ்ட் 13 2021:* டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட மதுரை மாவட்டத்தை சேர்ந்த தடகள வீராங்கனை செல்வி.ரேவதி வீரமணி அவர்களுக்கு லேடி டோக் பெருமாட்டி கல்லூரி சார்பில் வழங்கப்பட்ட 1 லட்சம் ரூபாய்கான காசோலையை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி , மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் பழனிவேல தியாகராஜன், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் அனிஷ்சேகர் வழங்கி பாராட்டினார்கள்.

# சமூக மாற்றத்தை வலியுறுத்தி தைவான் எக்ஸலன்ஸின் ஷேரிங் இஸ் கேரிங் பிரச்சாரம்




*சென்னை, ஆகஸ்ட் 13 2021:* ஒரு தனிநபர், சமூகம் அல்லது ஒரு சமூகத்தை ஆழமாக பாதிக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக சிலர் நம்புகிறார்கள். இந்த சக்தி பெருக்கப்பட்டால், தருணங்கள் உலகை ஒரு சிறந்த இடத்திற்கு மாற்றக்கூடிய ஒரு இயக்கமாக மாறும். இந்த சிந்தனைக்கு இணையாக, தைவான் எக்ஸலன்ஸ் குழுவினர் கடந்த ஆகஸ்ட் 11ம் தேதி அன்று ஒரு மெய்நிகர் நிகழ்வின் மூலம் ஷேரிங் இஸ் கேரிங் என்னும் உலகளாவிய பிரச்சாரத்தைத் தொடங்கினார். சமூக நோக்கங்கள், நிர்வாகம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய தங்களின் கருத்துக்களில் பணியாற்ற தொண்டு நிறுவனங்களை வழங்குவதன் மூலம் சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும். இதன் காரணமாக பல்வேறு சமூக நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பங்கேற்க மற்றும் அவர்கள் வேலை செய்ய விரும்பும் காரணங்களைப் பகிர்ந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளன.

12 பரிந்துரைகள் வரை தேர்வுக் குழுவால் பட்டியலிடப்பட்டு பொது வாக்களிப்புக்காக இணையதளத்தில் வெளியிடப்படும். முதல் மூன்று உள்ளீடுகள் தைவான் எக்ஸலன்ஸின் பிரத்யேக மானியத்தை வெல்லும். தைவான் எக்ஸலன்ஸின் விருது பெற்ற தயாரிப்புகள் மற்றும் பிராண்டுகளை அவர்களின் கண்டுபிடிப்பில் உள்ளடக்கிய திட்டங்களுக்கு கூடுதல் புள்ளிகள் வழங்கப்படும்.

முதல் 3 வெற்றி முன்மொழிவுகளுக்கு தலா 10,000 டாலர் பரிசுத் தொகையுடன், டைட்ரா நிறுவனம் அளித்த பாங்குதாரருடன் இணைந்து பணிபுரியும் பட்சத்தில் மேலும் 150,000 டாலர்கள் பரிசு தொகை கிடைக்கப்பெறும். சமூக கண்டுபிடிப்பாளர்களின் கனவுகளுக்கு இவ்வளவு பெரிய தொகை ஒதுக்கப்பட்ட நிலையில், உலகெங்கிலும் மாற்றங்களை உருவாக்க முனைபவர்கள் மற்றும் உலகை ஒரு சிறந்த இடமாக மாற்றுவதற்கான திட்டங்களை உருவாக்குபவர்ளுக்கு இத்திட்டம் ஒரு மிகப்பெரிய உந்துதலாக உள்ளது.

தைவான் எக்ஸலன்ஸ் அமைப்பு பாரம்பரிய சமூக சமூகப் பொறுப்பின் மூலம் சமூகங்களுக்கும், உலகளாவிய தேவைகளுக்கும் பங்களிக்கும் சிறந்த வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சி குறித்த மேலும் விவரங்களை வலீணீகூஷீமீ - நீணீகூஷீமீ.மீணீவீஷ்ணீஸீமீஜ்நீமீ நீறீமீஸீநீமீ.ஷீகூஷீ என்கிற இணையதளத்தில் பெறலாம்.

உலகெங்கிலும் உள்ள பயனர்களுக்கு கூடுதல் மதிப்பை வழங்கும் தைவானில் தயாரிக்கப்பட்ட புதுமையான தயாரிப்புகளை தைவான் எக்ஸலன்ஸ் வழங்குகிறது. இந்த சின்னம் கொண்ட அனைத்து தயாரிப்புகளும் வடிவமைப்பு, தரம், சந்தைப்படுத்தல், தைவான் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் உற்பத்தி ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தைவான் எக்ஸலன்ஸ் விருது, பொருளாதார அமைச்சகத்தால் 1992 இல் தொடங்கப்பட்டது மற்றும் 102 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டது.

# கோவை மாநகராட்சி தினக்கூலி ஒப்பந்த தூய்மை பணியாளர்களுக்கு மாத ஊதியம் தருவதில் கால தாமதம் - பணிப்புறக்கணிப்பு



*கோவை, ஆகஸ்ட் 13 2021:* கோவை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் தூய்மை பணியாளர்களாக சுமார் 3000க்கும் மேற்பட்டு வருகின்றனர். தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு தினக்கூலி ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதில் கடந்த இரண்டு மாத காலங்கலாக தாமதம் நீடித்து வருவதாக தகவல்கள் வருகின்றது. இதனை அடுத்து இன்று தினக்கூலி ஒப்பந்த பணியாளர்கள் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டத்தால் பரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பணியாளர்கவளிடம் நாளைக்குள் தங்களது மாத ஊதியம் வழங்கப்படும் என சமரசம் செய்ததையடுத்து இன்று பணிக்கு திரும்பி உள்ளதாக தகவல்கள் வெளியாகின்றது.

# மதுரை திருப்பரங்குன்றம் ஒன்றியத்துக்குட்பட்ட வலையங்குளம் கிராமத்தில் கொரானா பரவலை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

*மதுரை, ஆகஸ்ட் 13 2021:* மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஒன்றியத்துக்குட்பட்ட வலையங்குளம் கிராமத்தில் கொரானா பரவலை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வலையங் குளம் ஊராட்சி மன்ற தலைவர் முத்து பிள்ளை பெருமாள் தலைமையில் வலையங்குளம் கிராமம் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு தெருக்கள் சாலைகள் தூய்மையாக பராமரிக்கப்பட்டும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சுவரோவியம் செய்யப்பட்டும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பொதுமக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் கபசுரக் குடிநீர் விட்டமின் மாத்திரை, ஏழை எளிய மக்களுக்கும் தூய்மை பணியாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகளும் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் கிராமத்தில் தரமான சாலைகளை அமைக்கும் வகையில் ஏடி காலணி முதல் பாலசுந்தரம் வரை தார் சாலை அமைப்பதற்கான பணிகள் 8 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.



இதனை எடுத்து ஊராட்சி மன்ற தலைவர் முத்து பிள்ளை பெருமாள் அவர்களுக்கு பொது மக்களிடையே சமூக ஆர்வலர்கள் மத்தியில் பாராட்டும் நன்மதிப்பும் குவிந்து வருகின்றன.

# ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் மற்றும் ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி ஆகிய நிறுவனங்கள் சாதனை அளவாக ஜூலை 2021-ல் இரண்டாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிலையான வைப்புத் தொகைகளைப் (எஃப்.டி) பெற்றுள்ளன

*சென்னை ஆகஸ்ட் 13 2021:* சென்னையைச் சேர்ந்த (எஸ்எம்இ) ஸ்ரீராம் சிட்டி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட் (ஸ்ரீராம் சிட்டி), நிறுவனம் இரு சக்கர வாகனக் கடன்கள், சிறு நடுத்தர நிறுவனங்கள் கடன்கள் மற்றும் தங்க நகைக் கடன்களை வழங்கும் வங்கி சாரா நிதி நிறுவனமாகத் (என்பிஎஃப்சி) திகழ்கிறது. மும்பையைத் தலைமை இடமாகக் கொண்ட ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி (எஸ்டிஎஃப்சி), நாட்டின் மிகப்பெரிய சொத்துக் கடன்களுக்கான வங்கி சாரா நிதி நிறுவனமாகத் திகழ்கிறது. ஸ்ரீராம் குழுமத்தின் இந்த இரு பிரிவுகளும் சில்லறை பிரிவில் ஜூலை 2021-ல் ரூ. 2,000 கோடி நிலையான வைப்புத்தொகையை (திஞி) பெற்றுள்ளன. கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள், 64 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்ட மிகப் பெரிய தளம், 20 ஆண்டுகாலம் எஃப்.டி எனப்படும் நிலை வைப்புத் தொகை வணிகத்தில் அனுபவம்., டிஜிட்டல் கட்டமைப்புகள், வலுவான வழிகாட்டுதல் மற்றும் புகழ்பெற்ற பிராண்ட் பெயர், கோவிட் காலத்தில் மக்கள் பாதுகாப்புக்கான நிதி குறித்த தேவையை உணர்ந்தது ஆகியவை காரணமாக ஸ்ரீராம் சிட்டி மற்றும் எஸ்டிஎஃப்சி (ஷிஜிதிசி) நிறுவனங்கள் இந்த அளவு வைப்புத் தொகையைப் பெற்று சாதனை புரிந்துள்ளன. ஸ்ரீராம் சிட்டி நிறுவனம் ரூ. 390 கோடி ரூபாய் மதிப்புள்ள சில்லறை எஃப்டி-களை பெற்றுள்ளது, அதே நேரத்தில் எஸ்டிஎஃப்சி நிறுவனம் ஜூலை 2021-ல் ரூ. 1,610 கோடியை எஃப்டி-யாகப் பெற்றுள்ளது. இது இரு நிறுவனங்களுக்குமே சில்லறை எஃப்டி-களில் மூலம் பெற்ற மிக அதிக மதிப்பிலான நிதி ஆகும். இந்த நிதி ஆண்டின் (2021- 22) முதல் காலாண்டில், ஸ்ரீராம் சிட்டி சில்லறை எஃப்டி பிரிவில் 33% வளர்ச்சியைப் பெற்று 5,761 கோடி ரூபாய் வைப்புத் தொகையைப் பெற்றுள்ளது. அதே போல் எஸ்டிஎஃப்சி 49 சதவீத வளர்ச்சியைக் கண்டு 17,903 கோடி ரூபாய் வைப்புத் தொகையைப் பெற்றுள்ளது. ஸ்ரீராம் சிட்டி நிறுவனம் தமது 926 கிளைகளில் 43 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளது. ஸ்ரீராம் சிட்டி நிறுவனத்திற்கு அதிக வாடிக்கையாளர்கள் உள்ள முதல் 3 மாநிலங்கள் தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் தெலுங்கானா ஆகும். ஸ்ரீராம் சிட்டி நிறுவனத்தின் 94 சதவீத கிளைகள் கிராமப்புற மற்றும் கிராமங்களை ஒட்டிய புறநகர்ப்பகுதிகளில் அமைந்துள்ளன. நிறுவனத்தின் வைப்புத்தொகையில் 22 சதவீதம் பொது வைப்புத்தொகையை உள்ளடக்கியதாகும். எஸ்டிஎஃப்சி நிறுவனம் 1821 கிளைகளில் 21 லட்சம் வாடிக்கையாளர்களைக் கொண்ட வலுவான வாடிக்கையாளர் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. எஸ்.டி.எஃப்.சி. நிறுவனத்திற்கு அதிக வாடிக்கையாளர்கள் உள்ள முதல் 3 மாநிலங்கள் மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் டெல்லி ஆகும். எஸ்டிஎஃப்சி நிறுவனத்தின் கிளைகளில் 88 சதவீத கிளைகளை கிராமப்புற மற்றும் கிராமங்களை ஒட்டிய புறநகர்ப்பகுதிகளில் அமைந்துள்ளது. இந்த நிறுவனத்தின் வைப்புத்தொகையில் 17 சதவீதம் பொது வைப்புத்தொகையை உள்ளடக்கியதாகும்.

மூத்த குடிமக்களுக்கு 0.30 சதவீதம் ஆண்டுக்கு கூடுதல் வட்டி வழங்கப்படும்

சாதனை அளவாக இந்த அளவு வைப்புத் தொகை பெறப்பட்டது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஸ்ரீராம் சிட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி ஒய்எஸ் சக்கரவர்த்தி, "எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க நாங்கள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறோம். கடன் அல்லது நிதி என எந்தப் பிரிவாக இருந்தாலும் இந்த உறுதியுடன் செயல்படுகிறோம். வாடிக்கையாளர்கள் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை எங்களிடம் வைப்புத் தொகையாக வைக்க விரும்புகிறார்கள் என்பதை உணர்ந்து செயல்படுகிறோம். ஸ்ரீராம் குழும நிறுவனங்களால் வழங்கப்படும் வட்டி விகிதங்கள் இந்தத் தொழில்துறையில் மிகவும் கவர்ச்சிகரமான ஒன்றாக உள்ளது. வலுவான வழிகாட்டுதலைக் கொண்டுள்ளதால் இது ஒரு சிறந்த முதலீட்டை உருவாக்குகிறது, குறிப்பாக சந்தை அபாயங்களில் இருந்து காத்துக் கொள்ள விரும்பும் முதலீட்டாளர்களுக்கு இது மிகச் சிறந்த தேர்வாக அமைகிறது." என்றார்.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் உமேஷ் ரேவங்கர் கூறுகையில், "ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை டிஜிட்டல் முறையில் வர்த்தகம் செய்யும் நோக்கில் விரிவாக முதலீடு செய்துள்ளோம், இதனால் பெரும் எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களிடம் இருந்து டெபாசிட்களைப் பெற முடியும் என்பதுடன் மற்றும் சேவை கடன்களை வழங்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, நீண்டகால வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவுகள், வலுவான பிராண்ட் பெயர் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் காரணமாக எங்களது வாடிக்கையாளர்கள் மத்தியில் நாங்கள் உறுதியாக நிலை நிறுத்தப்பட்டுள்ளோம்." என்றார்.

# தந்தையை கத்தரிக்கோலால் குத்தி கொன்ற மகன்



*கோவை, ஆகஸ்ட் 13 2021:* கோவை சொக்கம்புதூர் பகுதியைச் சேர்ந்த ராமச்சந்திரன் இவர் வாழைக்காய் மண்டி வைத்து தொழில் செய்து வந்துள்ளார். இவரது வீட்டில் அவரது மகன் ராஜேஷ் என்கின்ற கோவிந்தராஜன் திருமணமாகி பெற்றோருடன் வசித்து வருகிறார். கடந்த ஒரு வருடமாக வீடு வாங்கி தர வேண்டும் என தந்தை ராமச்சந்திரன் வற்புறுத்தி வந்துள்ளார். இதனையடுத்து சில சமயங்களில் மது குடித்துவிட்டு ரகளையில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று கோவிந்தராஜன் அளவுக்கு அதிகமாக மது குடித்துவிட்டு வந்த தந்தை ராமச்சந்திரனிடம தகராறு செய்துள்ளார். அப்போது அருகில் இருந்த கத்தரிக்கோலை எடுத்து கழுத்தில் குத்தி கொலை செய்துள்ளார். இதுகுறித்து செல்வபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆடிப்பூரம் விழா அங்காள பரமேஸ்வரிக்கு வளையல்களால் சிறப்பு அலங்காரம்

*விழுப்புரம், ஆகஸ்ட் 13 2021:* விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் ஆடிப்பூரம் விழாவை முன்னிட்டு உற்சவர் அங்காளம்மனுக்கு மற்றும் மூலவர் அங்காளம்மனுக்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட வலைகளால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

இன்று ஆடிப்பூரம் தினத்தில் பக்தர்கள் வழிபட கோவில் நிர்வாகம் சார்பில் அனுமதி ரத்து செய்யப்பட்ட நிலையில் அங்காள பரமேஸ்வரிக்கு வளையல் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனைகள் நடைபெற்றன.

இதில் திருக்கோயில் உதவி ஆணையர் ராமு அறங்காவலர் குழு தலைவர் வடிவேல் பூசாரி அறங்காவலர்கள் செந்தில் பூசாரி தேவராஜ் பூசாரி ராமலிங்கம் பூசாரி செல்வம் பூசாரி சரவணன் பூசாரி சந்தானம் பூசாரி



உள்ளிட்டோர் மற்றும் கோவில் பூசாரிகள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# பொள்ளாச்சி பாலியல் வழக்கில் அதிமுக பிரமுகர் அருளானந்தம் ஜாமீன் மனு தள்ளுபடி



கோவை, ஆகஸ்ட் 13 2021: தமிழகத்தையே உலுக்கிய பெண்கள் பாலியல் பலாத்காரம் வழக்குகள் கடைசியாக அதிமுக மாணவர் அணியைச் சேர்ந்த அருளானந்தம் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார். இந்த நிலையில் அவர் உயர் நீதிமன்றத்தில் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்திருந்தார். ஜாமீனை ரத்து செய்த நீதிபதி கோவை மகிளா கோர்ட்டிற்க்கு 6 மாதத்தில் வழக்கை முடிக்க ஆலோசனை வழங்கி சிபிஐக்கு உதவும் வகையில் புதிய பெண் அதிகாரியை நியமித்து உத்தரவிடப்பட்டுள்ளது .

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கை தினசரி விசாரித்து விசாரணையை 6 மாதத்தில் முடிக்க கோவை மகளிர் நீதிமன்றத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவ.

பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அதிமுக நகர மாணவரணிச் செயலாளராக இருந்த அருளானந்தம்ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

சிபிஐ விசாரணைக்கு உதவும் வகையில் சிபிசிஐடி எஸ்.பி. முத்தரசியை நியமித்து உத்தரவு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எம்.தண்டபாணி. பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் நீதிபதி தொடர்ந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வழக்கை ஆறு மாதத்துக்குள் விரைந்து முடிக்க வேண்டும் சிபிஐ விசாரணைக்கு தொடர்ந்து சிபிசிஐடி போலீசார் உதவ வேண்டும் என பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

ஹலோ மிரர் மெட்ராஸ் - ல்
விளம்பரம் செய்து பயனடைவீர்

# டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீரர் நீரஜ் சோப்ராவுக்குப் 100 மில்லி கிராம் தங்கத்தில் சிற்பம் செதுக்கி கோவையை சேர்ந்தவர் அசத்தியுள்ளார்



கோவை, ஆகஸ்ட் 13 2021: கோவை குனியமுத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் யு.எம்.டி ராஜா. இவர் ஒவ்வொரு சிறந்த நிகழ்வுகளையும் தங்கம், வெள்ளி, குண்டு பல்புகள் உள்ளிட்ட இதர பொருட்களால் சிற்பமாக்குபவர்.

அவ்வாறு இவர் செய்த சிற்பங்கள் நாடு முழுவதும் பேசப்பட்சவையாகவும் இருந்திருக்கின்றன.

இந்த நிலையில், டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் தடகள பிரிவு போட்டிகளில் ஈட்டி எறிதல் பிரிவில், இந்தியாவின் சார்பில் பங்கேற்ற நீரஜ் சோப்ரா, இறுதி போட்டியில் தங்கபதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளது யு.எம்.டி. ராஜாவை ஈர்த்துள்ளது.

இதனிடையே, தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் யு.எம்.டி ராஜா 100 மில்லி கிராம் அளவிளான தங்கத்தில் நீரஜ் சோப்ரா ஈட்டி எரிவது போல் சிற்பத்தை செதுக்கியுள்ளார். இவரது இந்த சிற்பம் மக்களிடையே பெரும் பாராட்டுகளை பெற்றுள்ளது.

# முன்னாள் அமைச்சர் எஸ். பி. வேலுமணியின் வங்கி கணக்குகள் அனைத்தும் முடக்கம் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடவடிக்கை

கோவை, ஆகஸ்ட் 13 2021: லஞ்ச ஒழிப்பு போலீசார் இரண்டு நாட்களாக எஸ். பி. வேலுமணி வீடு உட்பட தமிழகத்தில் உள்ள 52க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனைகள் மேற்கொண்டனர். தொடர்ந்து 12 மணி நேரம் அவர் சென்னையில் தங்கியிருந்த எம்.எல்.ஏ., விடுதியிலும் அவரிடம் நேரடி விசாரணையில் ஈடுபட்டனர். விசாரணையின் முடிவில் பல்வேறு ஆவணங்கள் கிடைத்து இருப்பதாக கூறி இருந்தனர். இந்த நிலையில் சற்று நேரத்திற்கு முன்பு லஞ்ச ஒழிப்பு போலீசார் முன்னாள் அமைச்சர் வேலுமணியினுடைய வங்கி கணக்குகளை முடக்கி உள்ளனர். முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியின் வங்கி கணக்கை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் முடக்கியுள்ளனர்.

மாநகராட்சிகளில் ரூ.811 கோடி மதிப்பிலான ஒப்பந்த முறைகேடு தொடர்பாக, முன்னாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் எஸ்.பி.வேலுமணி வீடு உள்ளிட்ட 60 இடங்களில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் செவ்வாய்க்கிழமை சோதனை நடத்தினர்.

சென்னை, கோவை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் 12 மணி நேரத்துக்கும் மேலாக நடத்தப்பட்ட சோதனையில் கணக்கில் வராத ரூ.13 லட்சம் ரொக்கப் பணம், ரூ.2 கோடி மதிப்பிலான ஆவணங்கள், கணினிகள், ஹார்ட் டிஸ்க்குகள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டதாக லஞ்ச ஒழிப்புத் துறையினர். தெரிவித்தனர்.

மேலும் அவரது சொத்துகள் குறித்த அனைத்து ஆவணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சேப்பாக்கம் எம்.எல்.ஏ விடுதியிலும் லஞ்ச ஒழிப்புத் துறையினர் நேற்று சோதனை செய்ததுடன் அப்போது அங்கிருந்த வேலுமணியிடம் லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் 12 மணி நேரம் விசாரணை செய்தனர்.



